N!C-mail 18/08/22

//மின்னஞ்சல்// 05:34 PM

அ1

தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் சென்னை – 600 006

நு.க. எண்.52556/ அ4 / இ3 / 2022, நாள்.12.08.2022.

3132

*****

பொருள்: பள்ளிக்கல்வி - திருத்திய ஊதிய விகிதம் 2009– தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2006–2007 தொகுதி IV–ல் தட்டச்சராக நியமனம் செய்யப்பட்டது– ஒரு நபர் ஊதியக் குழுவின் படி ஊதியம் திருத்தியமைத்தது தொடர்பாக – விவரங்கள் கோருவது தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை எண்.340/நிதி (ஊதியக்குழு) நாள்.26.08.2010.
2. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P.No.31802/2018 & 32962/2018ன் மீதான இடைக்காலத் தீர்ப்பாணை நாள்.03.08.2022.
3. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை செயலரின் கடிதம் எண்.5468/AA4(1)/2021–1, நாள். 11.08.2022.

22 AUG 2022

----

பார்வை 1–ல் காணும் அரசாணையில், பத்தி எண்.6–ன்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நேரடியாக தேர்வு செய்யப்பட்ட பணியிடத்திற்கு 01.06.2009–க்கு பிறகு பணியில் சேர்ந்திருந்தால் தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2009–ன்படி குறைந்தபட்ச ஊதிய கட்டு மற்றும் தர ஊதியம் அடிப்படையிலேயே ஊதிய நிர்ணயம் செய்திட இயலும் என கூறப்பட்டுள்ளது. மேலும் 01.06.2009க்கு பின்னர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டு, பணிநாடுநர் பட்டியல் துறைக்கு அனுப்பப்பட்டு அதன் மூலம் பணிநியமனம் பெற்றிருந்தால், அவர்களது ஊதியத்தினை 1.86 காரணி மூலம் ஊதிய நிர்ணயம் செய்திட வழிவகை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் 2006 - 2007 ஆம் ஆண்டிற்கான தொகுதி – IV தேர்வில் தேரச்சி பெற்று 01.06.2009ற்கு பிறகு கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிநியமனம் பெற்ற இளநிலை உதவியாளர்கள்/தட்டச்சர்/சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III ஆகியோர்களுக்கு அவர்களது ஊதியத்தனை 1.86 காரணி மூலம் நிர்ணயம் செய்யப்பட்டு ஊதியம் பெற்று

(த.பி.பா)

வழங்கப்பட்டிருப்பின் அவர்களது விவரங்களை மாவட்ட வாரியாக தொகுத்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் ( EXCEL FORMAT -Tau Marudham Font)ல் பூர்த்தி செய்து 23.08.2022றகுள் இவ்வலுவலக A4 பிரிவு மின்னஞ்சலுக்கு (a4sec.tndse@nic.in) அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப்பொருள் சார்பான விவர அறிக்கையினை மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டி இருப்பதால் தனி கவனம் செலுத்தி உடன் அனுப்பி வைக்குமாறும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு– பட்டியல்

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).

பெறுநர் : அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல் :தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
நகல் :மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6 .
நகல் :இயக்குநர், மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,சென்னை–6.
நகல் :இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை –6.
நகல் :மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை – 6.
நகல் : இயக்குநர், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்ட இயக்ககம், சென்னை –6.
நகல் : உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை –6.

} தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : இவ்வலுவலக 'அ2' பிரிவு.

## படிவம்

மாவட்டம் :

| வ.எண். | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம்/பள்ளி | தமிழ்நாடு அரசுப பணியாளர் தேர்வாணையத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆண்டு | பணிநியமனம் வழங்கப்பட்ட ஆணை எண் மற்றும் நாள் | பணியில் சேர்ந்த நாள் | 1.86 காரணி மூலம் ஊதிய நிர்ணயம் செய்யப்பட்ட ஆணை எண் மற்றும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

HM / DEO / BEO / முதன்மைக் கல்வி அலுவலர்